*ஜனாதிபதிப் பதிவோடு*

1. ***அறிமுகம்***

*இலங்கை ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நேஷனல் நிறுவனம் சூழ்நிலை மற்றும் பொருத்தப்பாடு என்பனவற்றை அடிப்படையாகக் கொண்ட மற்றும் சாட்சியங்களுடன் கூடிய தேசிய மதிப்பீடுகளை அவ்வப்போது மேற்கொண்டுவருகின்றது.*

*இலங்கை ட்ரான்ஸ்பேரன்சி நிறுவனம் மேற்குறித்த உரிமைக் கட்டளையை வெளிப்படுத்துவதுடன், ஜனாதிபதியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வாக்குறுதிகளின் வெளிப்பாடுகள் தொடர்பில் அவரின் அடைவுகளை மதிப்பிடும் பணியினையும் மேற்கொண்டுள்ளது.*

*இரண்டாவது தேர்தலை முன்னிட்டு அவர் வெளியிட்ட* ***மகிந்த சிந்தனை வளமான எதிர்காலம்*** *எனும் கொள்கை விளக்க அறிவிப்பினை மையமாகக் கொண்டு கீழ்வரும் மதிப்பீடு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. நாட்டில் லஞ்சம் பெறுதை இல்லாதொழித்தல், மக்களுக்குப் பொறுப்புக்கூறுதலையும் நல்லாட்சிமுறையையும் மேம்படுத்துதல் என்பனவற்றுக்கு அமைவாக நிறைவேற்றதிகாரத்தின் கணக்குக்காட்டுதல் எனும் கொள்கையை ஊக்குவிப்பதே இம்மதிப்பீட்டின் நோக்கமாகும். 2010இன் இரண்டாம் மூன்றாம் காலாண்டு காலப்பகுதியை இம்மதிப்பீடு உள்ளடக்குகின்றது.*

*அரசியல் விஞ்ஞாபனத்தின் பக்கம் 38இற்கு ஏற்ப ஜனாதிபதியின் வாக்குறுதிகள் பின்வருமாறு அமைகின்றன.*

***"புதிய யாப்புத் திருத்ததின் பிரகாரம், சகல விதமான லஞ்சம், முறைகேடுகள் மற்றும் சட்டவிரோதச் செயற்பாடுகளை இல்லாதொழிப்பதற்கு சுதந்திரமான, அரசியல்ரீதியாக பக்கச்சார்பற்ற மற்றும் புத்திஜீவிகளை கொண்ட சபையொன்றை நியமிப்பேன்"***

***"பாராளுமன்றதின் முதலாவது சட்டமாக, அரசாங்கக் கூட்டுக்தாபனங்கள், சபைகள், மற்றும் நிதிநிறுவனங்களின் விலைமனுக்கோரல் செயற்பாட்டில் நடைபெறும் முறைகேடு, சட்டவிரோதச் நடைமுறைகள் மற்றும் வன்முறைகள் என்பனவற்றை இல்லாதொழிப்பதற்கான விஷேட சட்டம் ஒன்றை நான் அறிமுகப்படுத்துவேன்"***

***"அத்தகைய சட்டமொன்றை செயற்படுத்தும் 100 நாட்களில் சட்டரீதியான மற்றும் நிறுவனரீதியான வரைவுகள் வலுப்படுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்படும்."***

***"கிராமமட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அரசாங்க நிதியினை ஒதுக்கும் விடயத்தில் வெளிப்படைத்தன்மையினை உறுதிப்படுத்தும் குழுவொன்றை நிறுவுவதற்கான சட்டவரைவுகளை ஏற்படுத்துவேன். இக்குழு சமயத்தலைவர்கள், மக்கள்சபை செயலக மட்டங்களில் பொதுமக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமான நபர்கள் ஆகியோரை உள்ளடக்கியிருக்கும்"[1]***

***அத்தோடு, முன் குறிப்பிட்ட விஞ்ஞாபனத்தில் பக்கம் 52 - 58களில் ஜனாதிபதி வேறும் சில குறிப்பான வாக்குறுதிகளையும் அளித்துள்ளார். இவ்வாக்குறுதிகள் முற்றிலும் தேசிய உரையாடு மன்றம் ஒன்றைத் தாபிப்பதற்காக சர்வகட்சி மாநாட்டின் கூட்டொன்றை அமைத்தல், சமாதானமான அரசியல் தீர்வொன்றினைப் பெறுவதற்காக பிரஜைகளை***

***வலுப்படுத்துவதற்கு கிராமிய மட்ட விலைமனுக்கோரல்களின் ஆதிபத்தியத்தை ஊக்கப்படுத்தல், எல்லைப்புற அதிகாரப் பரவலாகத்தை உறுதிப்படுத்துவதற்காக, பதின்மூன்றாவது திருத்தத்தின் கீழ் வடமாகாணசபையை மீள்உருவாக்கம் செய்தல், இனக்குழுக்கள் மற்றும் சிறுபான்மை அரசியல் போக்குகள் என்பனவற்றுக்கு பிரதிநிதித்துவம் வழங்குவதற்காக விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையினை தேசிய மற்றும் மாவட்ட மட்டங்களில் உள்ளடக்கிய பாராளுமன்றத்தை அரச மன்றமாகத் தாபித்தல், தேசிய ஒருமைப்பாட்டிற்கு அவசியமான தேசிய மட்ட ஏற்புடைமையைப் பெறுவதற்காகவும் நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையினை உச்ச நம்பிக்கையாளராக மாற்றுதல் ஆகியவற்றுக்கான உரையாடல் ஒன்றைத் தொடங்குதல் ஆகிய அம்சங்களைக் குறித்து நிற்கின்றன.***

*இந்த மதிப்பீடானது, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறுதல் மற்றும் ஆட்சிமுறை என்பனவற்றுக்கு அமைவாக அரசாங்கக் கொள்கைகளில் ஏற்பட்டள்ள மாற்றங்கள், ஆட்சி யந்திரத்திற்கான முன்னேற்பாடுகளை உள்ளடக்கும் விதத்தில் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ள சட்டங்கள்/சட்டமூலங்கள், பிரேரணைகள் என்பனவற்றையும் நிர்வாகத்தினால் கொண்டுவரப்பட்ட அல்லது ரத்துச் செய்யப்பட்ட சட்ட மையங்கள், அரசாங்கத்தின் அமைப்பு மற்றும் நிர்வாக முறைகள் என்பனவற்றில் கொண்டுவரப்பட்டுள்ள மாற்றங்களையும் உள்ளடக்ககின்றது. அத்தோடு, சுதந்திரமான ஜனநாயக நிறுவனங்களின் ஒழுங்கான செயற்பாட்டினை நிறுவுதல் மற்றும் எளிதாக்குதல், பொருளாதாரம்/நிதிக் கொள்கைகள் என்பவற்றில் கொண்டுவரப்பட்டுள்ள மாற்றங்கள் ஆகியவற்றையும் இம்மதிப்பீடு அடிப்படையாகக் கொள்ளும்.*

## 2. கொள்கை மாற்றங்கள்

*2010ஆண்டு இடம்பெற்ற இரண்டு தேர்தல்களையும் அடுத்து, அரசாங்கம் முக்கியமான இரண்டு கொள்கை மாற்றங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. முதலாவது, அரசியல் யாப்பின் மீதான 18 ஆவது திருத்தச் சட்டம்.[2] இரண்டாவது, உள்ளூராட்சி திருத்தச் சட்டமூலம். எந்தவொரு தனிநபரும் இரண்டு தடவைகளுக்கு மேல் ஜனாதிபதியாக வருதற்கு விதிக்கப்பட்டிருந்த வரையறையின் நீக்கத்துடன் இப்போது அமுலில் உள்ள 18 ஆவது திருத்தச் சட்டம் ஏற்கனவே பதினேளாவது திருத்தச் சட்டத்தின் மூலம் கொண்டுவரப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரப் பகிர்வை இல்லாமல் செய்துள்ளது. இது பொதுத்துறைத் தொழில்களில் உள்ள நியமனங்கள், பதவியுயர்வு மற்றும் இடமாற்றம் ஆகியவற்றில் அமைச்சரவை கொண்டிருந்த அதிகாரத்தை மேலும் மத்திமப்படுத்தியுள்ளது.*

*2001ஆம் ஆண்டு, அரசாங்தின் முக்கியமான நிறுவனங்களை அரசியல் தளையிலிருந்து விடுவிக்கும் நோக்குடன் பதினேளாவது திருத்தச்சட்டம் பாராளுமன்றத்தினால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனினும், பதினேளாவது திருத்தச் சட்டத்தின் மீள்திருத்தத்திற்கான கொள்கை ரீதியான தீர்மானம் ஜனாதிபதியொருவர் மீண்டும் தெரிவாவதற்கு இருந்த எண்ணிக்கையை நீக்கியிருக்கின்றது. இந்த அரசியல் பின்னடைவு ஏற்கனவே வெற்றியளிக்காத ஒரு முறையின் மீது கொண்டுவரப்பட்டுள்ளது. இதனை வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறுதல் அல்லது கட்டுப்பாடு என்பனவற்றிக்கு நேரெதிராக முயற்சிக்கவும் பரீட்சிக்கவும் பட்டுள்ளது.*

*உள்ளூராட்சி (திருத்தச்) சட்ட வரைவு அரசியல் யாப்புக்கு முரனாக அமையவில்லை என்ற தீர்ப்பினை உயர்நீதிமன்றம் வழங்கிய பின்னர் பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இச்சட்ட வரைவு விகிதாசாரப் பிரதிநிதித்துவம் மற்றும் தொகுதிவாரிப் பிரதிநிதித்துவம் ஆகிய இரண்டையும் கலந்த புதிய ஒரு தேர்தல் முறையின் அறிமுகத்தையும் பரிசீலனையையும் சுட்டி நின்றது. பெரிய அரசியல் கட்சிகளுக்கு நியாயமற்ற முறையில் அனுகூலங்களைப் பெற்றுக்கொடுக்கும் முறை எனக்கருதி பல அரசியல் கட்சிகள் இந்த சட்ட வரைவினை எதிர்த்த போதும், இம்முறை இறைமை என்கின்ற எண்ணக்கருவையும் அதிகமாகப் பாதிப்படையச் செய்கின்றது. இதனால், புதியதொரு தேர்தல் முறையொன்றுக்கான தேவை உணரப்பட வேண்டியிருக்கின்றது. எவ்வாராயினும், உரிய துணைச் சட்டம் மற்றும் விதிமுறைகள் என்பன மிகத் திடமான முறையில் பயன்பாட்டில் இல்லாவிட்டால் அல்லது வற்புறுத்தப் படாவிட்டால், புதிய தேர்தல் முறையும் பிரதேசமட்டத்திலான ஒருமைப்பாட்டினை மேம்படுத்தாது.*

### *3. ஆட்சி அமைப்பிலும் நிர்வாக முறையிலும் கொண்டுவரப்பட்டுள்ள மாற்றங்கள்*

*2010இல் இடம்பெற்ற இரண்டு முக்கிய தேர்தல்களின் முடிவில் நிர்வாக அமைப்பில் சில முக்கியமான மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. சட்டமா அதிபர் திணைக்களம், சட்ட வரைஞர்கள் திணைக்களம் மற்றும் இலங்கைச் சுங்கம் ஆகியன ஜனாதிபதியின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. எந்தவொரு அரசாங்கத்திலும் மிக முக்கியமான பதவியான சட்டமா அதிபர் பதவி சுதந்திரமாக இயங்க வேண்டும்.[3] 2005ஆம் ஆண்டு ஜனாதிபதி முதல்தடவைாக அலுவலகத்தைக் கையேற்ற பின்னர், பதினேளாவது திருத்தச் சட்டத்தின் கீழ் குறிக்கப்பட்ட எந்த சட்டவிதிகளையும் பின்வற்றாமல் சட்டமா அதிபரை நியமித்தார். எவ்வறிருந்தாலும் சட்டமா அதிபர் திணைக்களம் நிர்வாக நோக்கங்களுக்காக அமைச்சொன்றின் கீழ் இயங்கிவந்தது. ஆனால், இத்திணைக்களம் நேரடியாக ஜனாதிபதியின் கீழ் கொண்டுவரப்பட்ட பின்னர், இதன் சுதந்திரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.*

*இந்த முக்கியமான அட்சிமுறை அரசியல் மயப்பட்டதற்கான ஒரு வராலாறு இருக்கின்றது. சட்டமா அதிபர் இந்த நாட்டின் பிரதம நீதியரசரை நியமித்த பல சந்தர்ப்பங்கள் உள்ளன. எவ்வாறாயினும், நிகழ்கால நிலைவரம் மிக மோசமானதாக உள்ளது. கணக்காளர் நாயகம் நேரடியாக ஜனாதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளார்.*

*இதேபோன்று, நகர அபிவிருத்தி அதிகாரசபை (UDA) பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. ஜனாதிபதி இதுசார்ந்த அமைச்சினை வைத்திருப்பதுடன் அதன் செயலாளராக அவரின் சகோதரர் கோடபய ராஜபக்ஷ காணப்படுகின்றார். அத்தோடு, இராணுவத்தைப் பயன்படுத்தி கொழும்பிலிலுள்ள சிவில் குடியிருப்புக்களை அபிவிருத்தி என்ற பெயரில் அகற்றிய பல சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இது மக்களின் உரிமையைப் பாதுகாப்பதில் அரசு கொண்டுள்ள பொறுப்புடைமையை மீறும் செயலாகும்.[4]*

### *4. சுதந்திர ஜனநாயக நிறுவனங்களின் உறுதியான செயற்பாட்டை இலகுபடுத்தல்*

*பதினேளாவது திருத்தச் சட்டம் சுயாதீனமான ஆணைக்குழுக்களை நியமித்தல், உயர் நீதிமன்றங்கள், சட்டமாஅதிபர், கணக்காளர் நாயகம் ஆகிய துறைகளின் சுயாதீனத் தன்மையைப் பாதுகாத்தல் ஆகிய நோக்கங்களுக்காகவே வழங்கப்பட்டது[5]. அரசியல் யாப்பின் பதினேழாவது திருத்தத்தங்களைக் கருத்திற் கொண்டு லஞ்ச ஊழல் ஆணைக்குழு, பொதுசேவை ஆணைக்குழு, தேர்தல்கள் ஆணைக்குழு, நீதிசேவை ஆணைக்குழு, தேசிய*

*பொலிஸ் ஆணைக்குழு மற்றும் வரையறைகளற்ற ஆணைக்குழு என்பன பொறுப்புக்கூறுதல் மட்டத்தினை உயர்த்தி ஓரளவுக்கு சுயாதீனமான முறையில் செயற்பட்டன.*

*ஏவ்வாறாயினும், பதினெட்டாவது திருத்தச் சட்டத்தின் பின்னர், பதினேளாவது திருத்தச் சட்டத்தின் முன்னேற்பாடுகள் ரத்துச் செய்யப்பட்டு, பாராளுமன்றப் பேரவை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இதானல், அரசாங்கத்தின் பிரதான பதவிகளின் நேர்மைதன்மைகள், சுயாதீனமாக இயங்கும் ஆணைக்குழுக்களின் செயற்பாடுகள் என்பன வலுவிழந்துள்ளன. பாராளுமன்றப் பேரவை அரசாங்கம் மற்றும் ஆணைக்குழுக்களுக்கு வழங்கப்படும் முக்கியமான நியமனங்களை வெறுமனே அவதானிக்கும் ஒரு சபையாகவே உள்ளது.*

### *5. ஆட்சிமுறைக்கு அமைவாக பொருளாதார/நிதிக் கொள்கைகளில் கொண்டுவரப்பட்டுள்ள மாற்றங்கள்*

*2010 ஆகஸ்ட், 15ம் திகதியன்று, ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு வழங்கிய ஜீஎஸ்பீ பிளஸ் வரிச்சலுகையை நிறுத்தியுள்ளது. படிப்படியாக தேய்ந்துவரும் இலங்கையின் ஆட்சிமுறை, மனிஉரிமைகள் மீதான மதிப்பு என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டே ஐரோப்பிய ஒன்றியம் இத்தீர்மானத்தை எடுத்துள்ளது. இதனால், இலங்கையில் புடைவைக் கைத்தொழில் மற்றும் வேறும் சில துறைகள் ஏனைய நாடுகளின் உற்பத்திகளுடன் போட்டிபோடும் திறனை நீண்டகால அடிப்படையில் இழக்கும். மேலும், அமெரிக்கச் சந்தையும் இந்த வரிச்சலுகை நீக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது.*[6]

*2009 ஜூலையில், சர்வதேச நாணைய நிதியம்(*IMF*), இலங்கையின் பொருளாதாரத்திற்கு*[7] *புத்துயிர் கொடுக்கும் ஆதார நடவடிக்கையாக 2.6 அமெரிக்க பில்லியன்களை வழங்கியது. இது தனிபர் கடன்தொகையை அதிகரிக்கச் செய்துள்ளது.*[8] *இத்தகைய கடன்களின் முக்கிய நிபந்தனைகளாக நுகர்வினைக் குறைத்தல், வீண்விரையத்தைக் குறைத்தல் வரவுசெலவுத் திட்டத்தில் பற்றாக்குறையை இல்லாது செய்தல் என்பன இருந்தன. என்றாலும், அரசாங்கம் பற்றாக்குறையை குறைக்கத் தவறியமையால் கடன்தொகையின் மூன்றாவது கட்டம் தாமதமாகியுள்ளது.*

*என்றாலும், பொதுச் சேவையில் நிலவும் அதிகரித்த செலவுகளுக்கு ஈடுகொடுக்கவும் ஏப்ரல் 22 தொடக்கம் 22 ஜூலை 2010 வரையிலான கடன் தவணைக்கட்டணங்களை செலுத்தவும் தொகுப்பூதிய நிதியத்திலிருந்து 440 பில்லியன் ரூபாவை ஒதுக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டள்ளார். இலங்கையில் இத்தகைய ஒதுக்கீடுகளை பாராளுமன்றத்திற்கு மாத்திரமே மேற்கொள்ள முடியும். பாராளுமன்றமே அத்தகைய பொது நிதியம்மீது முன்னுரித்துக் கொண்டுள்ளது.*[9]

### *6. உதிரிகள்*

*ஊடகச் சுதந்திரம் ஜனநாயகத்தின் பிரதான ஜீவநாடியாகும். யுத்தத்திற்குப் பிந்திய காலத்தில் ஊடகச் சுதந்திரத்தின் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் குறைவடைந்தாலும் அடக்கியாளும் அரசியல் கலாசாரம் ஊடகங்களை சுயதணிக்கையில் ஈடுபடும் நிலையை தோற்றுவித்துள்ளது. அத்தோடு, இந்த மதிப்பீடு இடம்பெற்ற காலத்தில் கடந்த ஆண்டுகளில் தாக்குதலுக்கு உள்ளான மற்றும் கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் பற்றி விசாரிப்பதற்கான எந்தவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பது ஒரு துன்புறுத்தும் செய்தியாகும்.*

*எனினும், 2010அம்ஆண்டு மே மாத்தினைத் தொடர்ந்து ஜனாதிபதி பயங்கரவாத் தடுப்புச் சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் குற்றம் காணப்பட்டு இருபது ஆண்டுகள்*

தடைவிதிக்கப்பட்டிருந்த மூத்த ஊடகவியலாளர் ஜே. எஸ். திஸ்ஸநாயகத்திற்கு மன்னிப்பு வழங்கினார்.

அதேநேரம், பொதுமக்களை பலப்படுத்தி அவர்களின் பங்குபற்றலை ஊக்குவிக்கும் தகவல் அறிவதற்கான சட்டத்தை அறிமுகப்படுத்த அரசாங்கம் இதுவரைத் தவறியுள்ளது. முன்னாள் நீதியமைச்சர் மிலிந்த மொரகொட இது தொடர்பான சட்டமூலம் ஒன்றை முடிவுக்குக் கொண்டுவரும் விடையத்தில் தொடர்ச்சியான ஆலோசனைக் கூட்டங்களை நடத்திவந்தார். 2010ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் அவர் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து இதனை பாராளுமன்றத்திற்கு கொண்டுவருவதற்கான ஆக்கபூர்வமான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை.

**முடிவுரை**

ஜனாதிபதி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் 38ஆம் பக்கத்தில் குறிப்பிட்டுள்ள வாக்குறுதிகளையும் அத்தகைய இலக்குகளை அடைவதை உறுதிசெய்வதற்காக அவர் எடுத்துள்ள ஒழுங்குகளையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் இரண்டுக்கும் இடையில் குறிப்பிடத்தக்களவு தொடர்பற்ற நிலை காணமுடிகின்றது.

அத்தோடு, தனது வாக்குறுதியில் குறிப்பிட்டபடி முதலாவது சட்டம் மோசடிகளை மட்டுப்படுத்துவதற்கும் ஆட்சிமுறையை மேம்படுத்துவற்கும் உரிய ஏற்பாடாக கொண்டுவரப்படவில்லை. மாறாக, அது சுயாதீன ஆணைக்குழுக்களையும் பொது துறைக்கான மத்தியப்படுத்தப்பட்ட நியமனமுறையினையும் பலவீனமடையச் செய்துள்ளது.

## 7. சிபாரிசுகள்

முடிவில், இந்த மதிப்பீட்டறிக்கை ஜனாதிபதி இந்த ஆணைக்குழுக்களை சுயாதீனமாக இயங்கச் செய்வதுடன் நாட்டின் ஆட்சி முறையில் கட்டுப்பாடுகள் மற்றும் தரம் என்பனவற்றை உயர்த்தும் வகையில் சட்டமா அதிபர் போன்ற பொதுப்பதவிகள் சுயாதீனமாக இயங்குவதை உறுதிசெய்வது பொருத்தமெனப் பரிந்துரைக்கின்றது.

அத்தோடு, ஆட்சிமுறையுடன் தொடர்பான பிரச்சினைகளை முதன்மையான விடயமாக எடுத்துரைக்கும் வகையில் அவருடைய ஆலோசகர்களுடன் தொடர்ச்சியான மாறாத உரையாடல் செயன்முறை ஒன்றைப் பேணிவருவது சிறந்ததெனப் பரிந்துரைக்கப்படுகின்றது.

நாட்டின் முறைகேடு மற்றும் ஊழல் மட்டத்தினைக் குறைக்கக்கூடிய உள்நாட்டு நிறுவனங்களின் வலுப்படுத்தல், அதனுடன் கூடிய கடுமையான நிதிக்கொள்கைகள், ஊழலுடன் தொடர்பான இறுக்கமான சட்ட மற்றும் விதிமுறைப் பிரயோகங்கள் இருக்க வேண்டுமெனவும் சிபாரிசு வழங்கப்படுகின்றது.

இந்த மதிப்பீடு வெளிவரும் போது, அரசியல் யாப்பின் மீதான பதினெட்டாவது திருத்தம் சட்டமாக வந்துவிட்டது. அதன் வெளிச்சத்தில், முக்கியமான பொது அலுவலகங்களுக்கு நேர்மைத்திறன் கொண்ட அதிகாரிகளை வெளிப்படைச் செயன்முறையினூடாகவும் குறித்த பதவிக்கான அடைவு விதிகளை முற்று முழுதாக வெளிப்படுத்தியும் நியமிப்பதன் வாயிலாக நேர்மைத்திறனை மேம்படுத்துவற்கான பிரக்ஞைபூர்வமான நடவடிக்கைகளை நிறைவேற்றதிகாரம் எடுக்கலாம்.

இந்த மதிப்பீட்டில் குறிக்கப்பட்ட ஜனாதிபதியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அடங்கும் வாக்குறுதிகள் உயிர்ப்படையும் விதத்திற்கு சாட்சியாக அடுத்த காலாண்டு அமையவேண்டும். அதற்கான அத்தனை முயற்சிகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**உசாத்துணைகள்**


1. பார்க்க, மகிந்த சிந்தனை பக்கம்.38
2. பார்க்க, "Adverse impact of the 18th Amendment on governance", www.tisrilanka.org, <18. 11. 2010>
3. பார்க்க TISl இன் ஊடக அறிக்கை, "Directly under president", <18. 11. 2010>
4. பார்க்க, 'Outrage in Mews st. as UDA demolishes houses, www.sundaytimes.lk, <18. 11. 2010>
5. TISL இன் இடப் பத்திரிகை, The forgotten constitutional council", <18. 11. 2010>
6. பார்க்க, Apparel Exports Dwindling : SLBOA, www.dailymirror.lk, <18. 11. 2010>
7. பார்க்க, www.imf.org , <20. 11. 2010>
8. பார்க்க http://www.imf.org/external/np/sec/pr/2009/pr09266.htm <20.11.2010>
9. பார்க்க, அரசியல் யாப்பின் சரத்து 148, 149 மற்றும் 150